2012 மே 14]

தொடர்பு மையம் குளச்சலில் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 மற்றும் 14–11–2011 ஆகிய தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில், காணாமல் போகும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், ஹெலிகாப்டர் தேவைப்படும் நிகழ்வுகளில் வாடகைக்கு அமர்த்திக்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு அறிவிப்பும் வெளியிடப்பட்டது. மேலும், வான்வழித் தேடுதல் தொடர்பான சாதனங்களில் ஒன்றான ஹெலிகாப்டர் இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறே கடலில் காணாமல் போகும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக தேவை ஏற்படும்போது நிகழ்வுகளின் அடிப்படையில் ஹெலிகாப்டர்களைக் கூடுதலாக வாடகைக்கு அமர்த்தும் வாய்ப்புகள் குறித்தும், சட்ட விதிமுறைகள் குறித்தும் தெளிவுபடுத்திட, இந்தியக் கடலோரக் காவல் படையின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

(முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: எனவே, இந்தியக் கடலோரக் காவல் படையின் அறிக்கை பெறப்பட்டவுடன் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

261—

விளையாட்டரங்கம்

***6250—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டத்தில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டத்தில் விளையாட்டரங்கம், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் அமைத்திட அக்கல்லூரி முதல்வரும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு செயல்படுத்த 15–12–2011–ல் ஆணை வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. ஆனால் அதேசமயத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்னும் ஏற்படவில்லை என்றும், அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்வித் துறையின் சார்பாக மாணவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்துதான் விளையாட்டுத் துறைக்கு என்ற ஷரத்து இருக்கிற காரணத்தினால் அந்த ஒப்பந்தம் தாமதமாகிறது. எனவே, உடனடியாகத் தலையிட்டு, அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தாங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

2012 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விளையாட்டு அரங்கம் தொடங்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார். திருப்பூரைப் பொறுத்தவரையில் அது புது மாவட்டம். அங்கே விளையாட்டரங்கம் உடனடியாகத் தொடங்குவதற்கு இடம் தேர்வு செய்கின்ற நிலையில் அங்கு சரியான இடம் கிடைக்கவில்லை. அதன் அடிப்படையில்தான் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் விளையாட்டரங்கம் தொடங்குவதற்கு அந்த மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்று இப்போது நடைபெற்றிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் இப்போது விளையாட்டு ஆணையம், ரூ.50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. அங்கு மாணவர்களுக்கு முதலிடம் கொடுப்பது மட்டுமல்ல, இடம் இப்போது திருப்பூரில் கிடைக்கவில்லை. அதன் அடிப்படையில்தான் இன்றைக்கு சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் தொடங்கப்பட்டிருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருப்பூரில் சரியான முறையில் இடம் தேர்வு செய்து தெரிவிப்பாரேயானால் அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் ஆகியவற்றை விளையாட்டுத் துறையின் சார்பாக உருவாக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையில் திருப்பூர் புது மாவட்டம் என்கிற காரணத்தால், பணி தொடங்குகிறபோது திருப்பூரில் போதுமான இடம் கிடைக்கவில்லை. உடனடியாகத் தொடங்கப்படவேண்டும் என்று அம்மா அவர்கள் ஆணையிட்டதால் சிக்கண்ணா அரசு கல்லூரி வளாகத்தில் விளையாட்டு அரங்கம் அமைத்திட அக்கல்லூரி முதல்வரும், விளையாட்டு ஆணையரும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு அது செயல்படுத்தப்பட்டு இன்றைக்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக இந்தப் பணியைத் தொடங்க இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க இடம் வழங்குமாறு அல்லது சிக்கண்ணா அரசு கல்லூரியிலேயே அமைக்க பரிந்துரை செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. உரிய கருத்துரு பெறப்பட்டவுடன் அரசின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டு திருப்பூர் மாவட்டத்திற்கான மாவட்ட விளையாட்டு வளாகம் உடனடியாக அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

விடுதி

***5526—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, வாழப்பந்தல் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவர், மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதல்வராகப் பதவியேற்ற பின், இந்த 12 மாத குறுகிய காலத்திற்குள் 56 விடுதிகளை இங்கே அமைப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டு பெரிய ஒரு வரலாற்றுச் சாதனை படைத்துவிட்டார்கள். அதிலும் முந்தைய ஆட்சியில் ஒவ்வொரு விடுதியிலும், 50 மாணவர்கள்